திருமங்கலம் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள வைகைக் கால்வாய் சீரமைப்புப் பணிகள்.

*வினா எண் 116 திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வைகை அணையிலிருந்து கால்வாய்களைச் சீரமைக்கும் பணியின் தொடர்பாகத் திருமங்கலம் தொகுதியில் எப்போது பணி நிறைவுபெறும்?

(ஆ) புதிதாகப் பாசன வசதி எத்தனை எக்கர்களுக்கு ளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் சீரமைப்புப் பணிகள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) திருமங்கலம் பிரதான கால்வாய்மூலம் 2,326 ஏக்கர் புதிய நிலங்கள் பாசன வசதி பெறும்.

திரு என் எஸ் வி. சித்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபோது இந்த சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 50,000 ஏக்கர் புதிதாக பாசனம் பெறும் என்று சொன்னார்கள். திருமங்கலத்தில் ஏறத்தாழ 23.26 ஏக்கர் பயன்பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். உசிலம்பட்டி தாலுகா இராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டி இருக்கின்ற காரணத்தால் இராமநாதபுரத்தின் வறட்சி இந்தப் பகுதியிலும் அதிகமாக இருக்கிறது. ஆகவே இப்போது அமைச்சரவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதி மிகவும் குறைவாக இருப்பதால் இன்னும் அதிகமான ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2,326 ஏக்கர் என்பது ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு முதலாவது கட்டமாக எடுத்துக் கொள்ளப் பெற்ற திட்டங்களிலே சேர்க்கப்பட்டது. இரண்டாவதாக 24,000 ஏக்கர்களுக்கு எடுக்கப்படவிருக்கிறது. அதிலேயும் திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் செய்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று நான் நினைக்கிறேன்.

1983 பிப்ரவரி 2]

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே, 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதிகளில் வேலை நடைபெறுகிற சூழ்நிலையை கவனித்தால், மிக மெத்தனமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, எப்படியாவது காரணம் காட்டி, மிக வறுமையான பஞ்சத்தில் அடிப்பட்ட பிரதேசம் என்பதால் முன்னுரிமை கொடுத்து அந்தப் பணிகளை 1984 டிசம்பருக்கு முன்னதாகவே முடிக்க தேவையான ஆணைகளை இட அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பகுதிகளில் இந்த வேலைகள் மிகவும் காலதாமதமாக இருப்பதற்கு காரணமே முதலாவதாக தயாரிக்கப் பட்ட திட்டங்களை முழுவதுமாக உலக வங்கி ஏற்றுக்கொள்ள வில்லை. சில பகுதிகளுக்குத்தான் ஒப்புதல் அளித்தார்கள். ஆனாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அந்தப் பகுதியினுடைய பின்தங்கிய நிலைமை எடுத்துக்காட்டி அவசியம் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னதன் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்தப் பகுதிகளைச் சேர்க்க வேண்டுமென்று—குறிப்பாக சிவகங்கைப் பகுதியையும் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே உத்திரவிட்டார்கள். அந்த அடிப்படையிலே திருப்பவும் ஆய்வு செய்து பணிகளை துவங்குகிறபோது, ஒவ்வொரு பணியையும் நிறைவேற்றுவதில் கால வேறுபாடு இருக்கலாம். ஆனால், எல்லாவற்றையும் 1984-க்குள் முடித்துவிட வேண்டுமென்று ஒரு முனைப்போடு அரசு இயங்கிக் கொண்டு வருகிறது.

சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக் கற்கள்.

*வினா எண் 117—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக் கல்லின் தரம் ஆராயப் பட்டதா?

(ஆ) ஆம் எனில், தரமான அச் சுண்ணாம்புக்கல்லை பயன் படுத்தி ஒரு சிமிண்ட் ஆலை நிறுவப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS